# மயிலாடுதுறை நகராட்சி

**குறள்:** வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

**பொருள்:** இறைவன் விருப்பு வெறுப்பு இல்லாதவன். அவனுடைய திருவடியைச் சென்று அடைபவருக்குத் துன்பங்கள் எதுவும் தோன்றாது.

**கூட்ட எண்:** 06/2022

நகராட்சி அலுவலம்,
மயிலாடுதுறை

நாள்: 01/06/2022

## அவசரக் கூட்டம்

அன்புடையீர்,

பொருள்: கூட்டம் – மயிலாடுதுறை நகராட்சி – அவசரக் கூட்டம் நடைபெறுதல் – சம்பந்தமாக.

*******

மயிலாடுதுறை நகர்மன்ற அவசரக் கூட்டம் 01.06.2022ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நகர்மன்றத் தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டரங்கில் நடைபெறும் அவசரக் கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(நா.செல்வராஜ்)
நகர்மன்றத் தலைவர்
மயிலாடுதுறை நகராட்சி

1) மயிலாடுதுறை நகரில் உள்ள போக்குவரத்திற்கு நெரிசலினை தவிர்க்கும் பொருட்டும், நகரின் வளர்ச்சியை கருத்தில் கொண்டும் மயிலாடுதுறை நகரின் எல்லையையொட்டியுள்ள மணக்குடி கிராமத்தில், பூம்புகார் கல்லணை நெடுஞ்சாலையில் புதியதாக புறவழிச்சாலை அமைக்கப்படவுள்ள இடத்தின் அருகில் புல எண். 169/1ஏ1, பகுதி, 170, 172–ல் 13.77 ஏக்கர் பரப்புடைய தருமபுரம் ஆதினம் பராமரிப்பில் உள்ள ஸ்ரீ சக்திபுரீஸ்வரர் தேவஸ்தானத்திற்கு சொந்தமான இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க உரிய பிரேரணைகள் அரசுக்கு அனுப்பப்பட்டு, தருமபுரம் ஆதினம் அவர்களால் முன் நுழைவு அனுமதியும் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்திற்கு கிரைய தொகை நிர்ணயம் செய்ய அரசிடம் தற்போது கோப்பு பரிசீலனையில் உள்ளது.

மேலும், மயிலாடுதுறை நகராட்சியினையொட்டியுள்ள மன்னம்பந்தல் கிராமத்தில் தற்போது மயிலாடுதுறை புதிய மாவட்டமாக அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளதையடுத்து புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றது.

உத்தேச புதிய பேரூந்துநிலையத்தையும், புதிய மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தையும் ஒட்டி புறவழிச்சாலைகள் அமையவுள்ளதாலும், மயிலாடுதுறை தற்போது உள்ள எல்லையினையொட்டி அமைந்துள்ள 1) மணக்குடி கிராமம், 2) மன்னம்பந்தல் கிராமம் 3) வள்ளலாகரம் கிராமம் 4) மயிலாடுதுறை ரூரல் 5) பட்டமங்கலம் (பகுதி), 6) நல்லத்துக்குடி, 7) சித்தர்காடு கிராமம், 8) மாப்படுகை கிராமம் (பகுதி), 9) திருவிழந்தூர், 10) நீடுர் கிராமம் ஆகிய கிராமங்களை மயிலாடுதுறை நகராட்சியின் வளர்ச்சி மற்றும் வருவாய் மேம்பாட்டினை கருத்தில் கொண்டும் நகராட்சியின் தரத்தினை உயர்த்திடவும் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் திரு.,எஸ். ராஜகுமார், அவர்கள் நகர்மன்றம் மூலம் முடிவு செய்து நடவடிக்கை எடுக்க 19.05.2022ந் தேதி கடிதத்தின் மூலம் கோரியுள்ளார். எனவே, நகரப்பகுதியின் எல்லையினை ஒட்டிய மேற்கண்ட 10 ஊரக உள்ளாட்சிகளில் 1) திருஇந்தளூர், 2) நீடுர், 3) மாப்படுகை, 4) சித்தர்காடு, 5) பட்டமங்கலம், 6) நல்லத்துக்குடி மற்றும் 7) மயிலாடுதுறை ரூரல் ஆகியவை வளர்ச்சியடைந்த கிராமங்கள் என்பதால் மயிலாடுதுறை நகராட்சியுடன் இணைத்தால் நகராட்சியின் தரம் உயர்வதுடன் வருவாய் பெருகும். ஏனவே, மேற்கண்ட வளர்ச்சியடைந்த 7 ஊரக பகுதிகளுடன் 1) மணக்குடி, 2) மன்னம்பந்தல், மற்றும் 3) வள்ளலாகரம் ஆகிய 3 ஊரகப்பகுதியில் உள்ளிட்ட 10 ஊரகப்பகுதியினை நகராட்சியுடன் இணைக்க உரிய அரசாணை பிறப்பிக்கக்கோரி அரசிற்கு உரிய முன்மொழிவுகள் அனுப்பி வைத்திட மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு**</u>:– 1) மன்றம் முடிவு செய்யலாம்.

2) மயிலாடுதுறை நகராட்சியின் வருவாய் பெருகுவதுடன் போக்குவரத்து நெரிசல் குறைவதோடு மட்டுமல்லாமல் மயிலாடுதுறை நகரும் வளர்ச்சி அடையும் என்பதால் உரிய முன்மொழிவினை அரசிற்கு அனுப்பலாம்.

**<u>ந..க.எண்.5028/2021/எப்1 ,</u>**

**<u>மன்றத் தீர்மானம் எண்.  94 ,  நாள்:  01.06.2022</u>**

நகராட்சியின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு நகராட்சி அருகில் உள்ள ஊராட்சி பகுதிகளை  இணைக்க அரசிற்கு முன்மொழிவுகளை அனுப்புவதற்கு மன்றம் ஏக மனதாக தீர்மானிக்கப்பட்டது.

(ஒம்./ ந.செல்வராஜ்)
நகரமன்றத் தலைவர்,
மயிலாடுதுறை நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்,
மயிலாடுதுறை நகராட்சி.